**கவனிக்க.**-2024.06.14 ஆந் திகதிய 2389 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2390 - 2024 ජූනි මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.06.20

*2390 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | *1487* |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | *1484* | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | *1486* | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, யூலை மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, யூன் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1483 - B 082582 - 5,403 (2024/06)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## மாவட்ட , நீதிவான் நீதிமன்றம்- மன்னார்

## நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான பொருட்கள் ஏல விற்பனை

மன்னார் நீதிவான் நீதிமன்றில் பின்வரும் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான பின்வரும் பொருட்கள் 2024.07.06ஆந் திகதி இந்நீதிமன்ற வளாகத்தில் வைத்து காலை 9.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

02. யாராவது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது பொருட்களில் உரிமை கோருமிடத்து விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு தமது கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

03. பொது மக்கள் மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் விற்பனைக்கு அரைமணித்தியாலத்திற்கு முன்பு பொருட்களைப் பார்வையிடலாம்.

04. ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதாவது பொருட்களின் மதிப்பு விலை கிடைக்காதவிடத்து அப் பொருட்களின் ஏலவிற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

05. விற்கப்பட்ட பொருட்களுக்குப் பணத்தை உடன் செலுத்தி பொருட்களை உடனடியாக நீதிமன்ற வளவில் இருந்து அகற்ற வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செய்யப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

M.M. ரதீப் அஹமட்,
மே.மாவட்ட நீதிபதி/மே. நீதிவான்.

மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,
மன்னார்.

**பகிரங்க ஏல விற்பனை -2024**

**சான்றுப் பொருட்களின் விபரங்கள்**

| இல. | வழக்கு இல. | சான்றுப்பொருள் இல. | சான்றுப்பொருள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | AR/ 139/24 | - | இரும்பு பெரல்கள் | 08 |
| 02 | AR/ 149/24 | - | தாச்சிகள் | 02 |
| 03 | AR /154/24 | - | இரும்புத் தகடுகள் | 04 |
| 04 | AR/ 150/24 | - | முள்ளுக்கம்பி றோல் | 01 |
| 05 | AR/ 138/24 | - | பிளாஸ்ரிக் பெரல்கள் | 08 |
| 06 | AR /151/24 | - | எரிவாயு அடுப்பு | 01 |
| 07 | AR/ 356/24 | - | Truss ( உடைந்த நிலையில் காணப்படும் இரும்பு கேடர்கள்) | - |

| இல. | வழக்கு இல. | சான்றுப்பொருள் இல. | சான்றுப்பொருள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 08 | AR/ 156/24 | - | பிளாஸ்ரிக் கூடைகள் | 25 |
| 09 | AR/ 950/23 | - | வாகனத்தின் ரயர்கள் | 06 |
| 10 | AR/ 157/24 | - | சங்குகள் | 112 |
| 11 | AR/ 155/24 | - | பிளாஸ்ரிக் பெட்டிகள் | 08 |
| 12 | AR/ 158/24 | - | சங்குகள் | 198 |
| 13 | AR /152/24 | - | கடற்டோச் லைட் | 20 |
| 14 | AR/ 70/24 | PR/ 157/23 | பிளாஸ்ரிக் பெரல்கள் | 12 |
| 15 | AR /71/24 | PR /158/23 | பிளாஸ்ரிக் பெரல்கள் | 12 |
| 16 | AR/ 494/20 | - | தண்ணீர் இறைக்கும் இயந்திரம் | 01 |
| 17 | AR /357/24 | - | பிளாஸ்ரிக் கதிரைகள் | 06 |
| 18 | AR/ 125/24 | - | வாளிகள் | 10 |
| 19 | AR/ 996/23 | - | வலைக்கம்பிக் கூறுகள் | 52 |
| 20 | AR /140/24 | - | அலுமினியப் பானைகள் | 08 |

**பகிரங்க ஏல விற்பனை -2024**
**படகுகளின் விபரங்கள்**

| இல. | வழக்கு இல. | சான்றுப்பொருள் விபரம் | எண்ணிக்கை | வர்க்கம் |
|---|---|---|---|---|
| 01 | AR 322/24 | UCHANT 221 படகு | 01 | நெய்ல் மரைன் |
| 02 | AR 341/24 | 7-1596 MNR படகு | 01 | நெய்ல் மரைன் |
| 03 | AR 963/23 | OFRP - A - 3441 படகு | 01 | கிறிஸ்டினா மரைன் |
| 04 | AR/ 342/24 | OFRPA 4129 படகு | 01 | டிசா மரைன் |
| 05 | AR/ 220/08 | படகு | 01 | நெய்ல் மரைன் |
| 06 | B /335/06 | OFRPA - 1516 படகு | 01 | நெய்ல் மரைன் |
| 07 | AR/ 323/24 | OFRPA - 3109 | 01 | நெய்ல் மரைன் |

# ஆய விற்பனையும் குத்தகையும்

## 2025 ஆம் ஆண்டுக்கான குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணைகள் குத்தகை விற்பனை

2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும், 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் மதுவரி ஆணையாளரினால் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரை குருநாகல் பிரதேச செயலகப் பிரிவினால் கேள்விகோரல் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு கொள்வனவு செய்ய முன்வருவோர் குறித்த கேள்விகோரல் படிவங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரங்களுக்கமைய வைப்புத் தொகையைச் செலுத்தி எந்த பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் உள்ள காசாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினையும் மேற்குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலில் கள்ளு விற்பனை செய்யும் நிபந்தனைகளின் படி பெற்றுக்கொண்ட சொத்துச் சான்றிதழையும் மெழுகிடப்பட்ட உறையில் இட்டு, இடது பக்க மேல் மூலையில் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் தெளிவாக குறிப்பிடல் வேண்டும். அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கடைசி நேரத்திற்குள் முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் அல்லது இந்த பிரதேச செயலகத்தில் இதற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியினுள் இடுவதன் மூலம் குருநாகல் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கப்பெறச் செய்ய வேண்டும். குறித்த கேள்விப் பத்திரத்தினை எந்தவொரு பிரதேச செயலகத்தில் இருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரம் கோரும் நபர்களால் கேள்விகோரல் படிவங்களைப் பூர்த்தி செய்யும் போது கேள்வி கோரல் பத்திரங்களில் மேற்கொள்ளப்படும் சகல திருத்தங்களிலும் கேள்வி கோரும் நபர் அவரது முழுமையான கையொப்பத்தை இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும். அவ்வாறு செய்யத்தவறும் பட்சத்தில் அக்கேள்வி கோரல்கள் நிராகரிக்கப்படும்.

2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி மு.ப. 10.30 மணியுடன் அக்கேள்வி கோரல் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப் பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

எக் காரணத்தையும் அறிவிக்காமல் கேள்விப் பத்திரமொன்றை அல்லது எல்லா கேள்வி பத்திரங்களையும் நிராகரிக்கும் உரிமை பிரதேச செயலாளருக்கு உண்டு.

தனியாக குத்தகைக்குப் பெற்றவர் என அறிவிக்கப்பட்டதன் பின்னர் பொருத்தமான கேள்விதாரர் எனத் தெரிவு செய்யப்பட்டதும், அறிவித்தல் கொடுக்கப்பட்ட திகதி பி.ப. 2.00 மணிக்கு குருநாகல் பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பிணைப் பணத்தை வைப்புச் செய்து விற்பனை நிபந்தனைகளில் கைச்சாத்திடல் வேண்டும்.

2025 ஆம் வருடத்திற்காக தற்போதுள்ள கள்ளுத் தவறணைகள் உள்ள இடங்களை வழங்க வாக்குறுதி அளிக்கப்படுவதில்லை. தற்சமயம் கள்ளுத் தவறணைகள் நடாத்தப்பட்டுச் செல்லும் கட்டிடங்கள் 2025 ஆம் ஆண்டுக்கு கிடைக்கப்பெறாது விடின் அதற்குப் பதிலாக தேர்ந்தெடுக்கப்படுகின்ற மற்றொரு இடம் பொருத்தமானதா என்பதை கேள்விக்கோரல் அறிவித்தல் வழங்கப்பட்ட திகதி முதல் 30 நாட்களினுள் சிறந்த கேளவிதாரரினால் அதற்காக குருநாகல் பிரதேச செயலாளரிடமிருந்து அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதிக்கு குத்தகைகளை விற்பனை செய்வதில் விரும்பத்தக்க கோரலொன்று இல்லாதிருப்பின் 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மீண்டும் குத்தகைகளை விற்பனை செய்தல் குறித்த இடத்திலேயே நடாத்தப்படும். மேலகதிக விபரங்கள் தேவைப்படின் குருநாகல் பிரதேச செயலகத்தை நாடவும்.

டப்ளியு. எச். சேனாதிஸ்ஸ,
பிரதேச செயலாளர்,
குருநாகல்.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
குருநாகல்,
2024, யூன் 06.

**அட்டவணை**

**குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்றல் - 2025**

| இலக்கமும் பெயரும் | பத்துவ | கள்ளுத்தவறணை திறக்கப்பட வேண்டிய பிரதேசம் | கேள்விப்பத்திர வைப்புத் தொகை | கேள்விப்பத்திரம் முடியும் திகதியும் நேரமும் | தவறணைகள் திறக்கப்படும் நேரம் | தவறணைகள் மூடப்படும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| இல.02 குருநாகல் | வேஉடவில்லி ஹறத்பத்துவ | மாநகரப் பிரிவு இல.01, 09, 10, 11, 12 | ரூபா 3,000 | 2024, ஒகத்து 23 மு. ப. 10.30 மணி வரை | மு. ப. 10.00- பி. ப. 9.00 மணி வரை | பி. ப. 9.00- மு.ப. 10.00 மணி வரை |

06-128

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**ஏசிஇ லொஜிஸ்டிக்ஸ் லங்கா வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் இல. பீவீ-106459**
**இறுதிக்கூட்டம் பற்றிய அறிவித்தல்**

ஏசிஇ லொஜிஸ்டிக்ஸ் லங்கா வரையறுக்கப்பட்ட நிறுவனம் உறுப்பினர்களது இறுதிக்கூட்டம் பின்வரும் நோக்கத்திற்காக கொழும்பு 03, இல. 09, 03ஆவது மாடி, பாடசாலை வீதி, 09- 1/2 ஆம் இலக்கத்தில் 2024, யூலை 22 ஆந் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு நடைபெறுமென 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 331( 2) ஆம் பிரிவைப் பின்பற்றி இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

* ஒழித்துக்கட்டல் எவ்வாறு நடாத்தப்பட்டதென்பது பற்றிய கணக்கொன்றைக் கூட்டத்தின் முன்னர் இடுதலும் அது பற்றிய ஏதேனும் விளக்கத்தைக் கொடுத்தலும்.
* கம்பனிகள் புத்தகங்களும் பதிவேடுகளும் எவ்வாறு கையுதிர்க்கப்பட வேண்டுமென முடிவு செய்தல்.

விதான ஆராச்சிலாகே சானக புஷ்ப குமார,
ஒழித்துக்கட்டுநர்.

இல. 03 ஆவது மாடி,
9- 1/2, பாடசாலை வீதி,
கொழும்பு -03.

06- 155

---

**ஸ்ரீ ஷாக்யசிங்க பல்கலைக்கழகம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கம்பனிச் சட்டத்தின் கீழ் 2007 ஆம் ஆண்டு மே மாதம் பத்தொன்பதாம் திகதி இரண்டாயிரத்து இருபத்தி நான்கு இலக்கம் GA 00301308 என்ற இலக்கத்தின் கீழ் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட நிறுவனம் என இதன் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பௌத்த தத்துவத்தைப் பரப்பும் கூட்டுத்தாபனத்தின் முக்கிய நோக்கங்களின் அடிப்படையில் பாடத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என்றும், படிப்பில் சேருபவர்களுக்கும், இறுதி மதிப்பீட்டை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கும் சான்றிதழும் வழங்கப்படும் என்றும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. விருது வழங்கப்படும்.

இயக்குநர்கள் குழுவின் உத்தரவுப்படி,

BIRD'S EYE COMPANY
SECRETARIAL (PVT) LTD,
நிறுவனத்தின் செயலாளர்.

06- 156